***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//376 /2022 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | பூங்கொடி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 17.07.2025.

முதல் விசாரணை

நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 ஔவையார் என் அம்மா அசா2 கோவிந்தன் என் அப்பா. 10.11.2015 ம் வருடம் இரவு 10.30 மணியளவில் என் அக்கா கணவர் அரிகிருஷ்ணன் வீட்டிற்கு குடித்து விட்டு வந்தார். அப்போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டின் முன் நின்று என் மாமா அரிகிருஷ்ணனை என் போனை நீ தான் திருடிவிட்டாய் வெளியே வா என சத்தம் போட்டு கொண்டிருந்தார். அப்போது என் அப்பா அவர் தூங்கி விட்டார் நீயேன் சத்தம் போடுகிறாய் எனகேட்டதற்கு என் அப்பாவை ஆஜர் எதிரி வேஷ்டியை கிழித்து விட்டு அடித்தார். ஆஜர் எதிரி எங்களை பார்த்து வேறு யாருக்கோ பிறந்தவர்கள் என மிகவும் கெட்ட வார்த்தைகளால் பேசினார். ஆஜர் எதிரி அவ்வாறு பேசியதால் எனக்கு கஷ்டமாக இருந்தது. ஆஜர் எதிரி தற்போது வரை நான் ஊரில் இருந்து வந்தால் என்னை பார்த்து முறைப்பது, பைக்கை பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்துவது என செய்து கொண்டிருக்கிறார். நடந்த சம்பவம் பொறுத்து நான், அம்மா,அப்பா காவல்நிலையம் சென்று புகார்

கொடுத்தோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை செய்ய போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//376 /2022 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | கோவிந்தன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 17.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது குலசேரமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 ஔவையார் என் மனைவி. 2015ம் ஆண்டு தீபாவளி சமயத்தில் என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள கோவிலின் திண்டில் ஆஜர் எதிரி என் மருமகன் அரிகிருஷ்ணனையும், என் மகளையும் தீபாவளிக்கு விருந்திற்கு அழைத்திருந்த சமயத்தில் ஆஜர் எதிரி என் மருமகனை தேடி வீட்டிற்கு வந்தார். நான் என் மருமகன் வீட்டில் இல்லை. நீங்கள் இருவரும் தானே ஒன்றாக அலைந்தீர்கள் என்று கேட்டேன். அதன் பின் ஆஜர் எதிரியிடம் ஏன் என் மருமகனை விருந்துக்கு வந்த சமயத்தில் தண்ணீர் அடிக்க கூட்டு போனீர்கள் என கேட்டதற்கு ஆஜர் எதிரி என்னை பார்த்து உன்னையவால கூப்பிட்டேன் என என்னை அடித்து எனது சாரத்தை கிழித்து விட்டார். அதன் பின்பு ஆஜர் எதிரி என் மகள்களை கேலி செய்தார். எதிரி மீது நடவடிக்கை எடுக்க நான், என் மனைவி, என் மகள் பூங்கொடி ஆகியோர் காவல்நிலையத்திற்கு சென்றோம். போலிஸார் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை செய்ய போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//376 /2022 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ஔவையார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 17.07.2025.

முதல் விசாரணை

நான் தற்போது குலசேரமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உறவினர் என் மகள் கிருஷ்ணவேணிக்கும், என் மருமகன் அரிகிருஷ்ணன் என்பவருக்கும் திருமணம் செய்து கொடுத்து தீபாவளிக்காக என் மகளையும், மருமகனையும் வீட்டிற்கு அழைத்த போது என் மருமகனுக்கு ஆஜர் எதிரி குடிக்க வைத்துள்ளார். நான் ஆஜர் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 10.ம் தேதி 2015 ம் வருடம் ஐப்பசி மாதம் என் கணவரை ஆஜர் எதிரி அடித்துள்ளார். அதை என் இளையமகள் பூங்கொடியை பார்த்து கேட்டதற்கு ஆஜர் எதிரி என் மகளை அசிங்கமாக பேசினார். என் மகளை மிகவும் தரக்குறைவாக ஆஜர் எதிரி பேசினார். உடனே ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை செய்ய போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi